

தொழிலாளர் நலன்மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் சென்னை, கொண்டித்தோப்பு மற்றும் சூளை பகுதிகளில் அமைந்துள்ள இ.எஸ்.ஐ மருந்தகங்களில் திடீர் ஆய்வுகளை மேற்கொண்டார். உடன், இ.எஸ்.ஐ மருத்துவமனைகளின் இயக்குநர் மருத்துவர். இளங்கோ மகேஸ்வரன் மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் உள்ளனர்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் திருப்பூர் மாநகராட்சியில் செயல்படுத்தப் பட்டு வரும் பல்வேறு திட்டப் பணிகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், வடக்கு மாநகர கழக செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெய்பீம், திருப்பூர் சார் ஆட்சியர் சௌம்யா ஆனந்த், துணை மேயர் ரா.பாலசுப்பரமணியம், மண்டலத் தலைவர்கள் தம்பி கோவிந்தராஜ், வெ.உமாமகேஸ்வரி, கல்விக்குழு தலைவர் பெ.திவாகரன், சுகாதார குழு தலைவர் கவிதா நேதாஜி கண்ணன் உள்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### தமிழ்நாட்டை வஞ்சிக்கும் பாசிச ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# திண்டுக்கல் மாவட்டத்தில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## அமைச்சர் அர.சக்கரபாணி - ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. அறிக்கை!

திண்டுக்கல், ஜூலை 26 -

திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அர.சக்கரபாணி, கிழக்கு மாவட்டச் செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஒரு நாட்டின் நிதிநிலை அறிக்கை என்பது இந்தியத் திருநாட்டின் அனைத்து மாநிலங்களுக்கும் உரிய பங்கினை பகிர்ந்தளித்து நாடு முழுவதும் சமச்சீரான வளர்ச்சியை உருவாக்கிட உதவுவதுடன், நாட்டில் வாழும் கடைக்கோடி மனிதர்களின் வாழ்வை மேம்படுத்தும் கொள்கை பிரகடனமாகவே இருக்க வேண்டும். ஆனால் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை, ஒட்டு மொத்த இந்திய நாட்டிற்கான நிதிநிலை அறிக்கையாக தெரியவில்லை. மாறாக, தங்கள் ஆட்சியை காப்பாற்றிக் கொள்வதற்காக சில மாநிலங்களுக்கு மட்டும் நிதியை தாராளமாக அள்ளிக் கொடுத்தும், நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்து வரும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் மீது வன்மத்தை கக்கிடும் வகையில் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது.





மெட்ரோ ரயில் திட்டத்திற்கான நிதி, தமிழ்நாடு சந்தித்த இரண்டு தொடர் பேரிடர் இழப்புகள் ஆகியவற்றிற்கு நிதி வழங்கிட வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளை முற்றிலுமாக புறக்கணித்து, சில மாநிலங்களுக்கு மட்டும் பேரிடர் நிதி அள்ளி வழங்கப்பட்டுள்ளது.

பா.ஜ. ஆட்சி செய்யாத மாநிலங்களை, ஒன்றிய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் பார்க்கிறது. அதேநேரம் ஆட்சியை தக்கவைத்துக் கொள்ள குறிப்பிட்ட மாநிலங்களுக்கு அதிக நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. வெள்ள பாதிப்பின் போது ஒன்றிய அமைச்சர்கள், தமிழகத்திற்கு வந்து கோவிலுக்கு சென்று வந்தனரே தவிர தமிழ்நாட்டின் கோரிக்கையை கணக்கில் ஏற்று கொள்ளவில்லை. ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டதற்கு இங்கு ஒரு இடம் கூட கிடைக்காதது தான் காரணம். 8 முறை பிரதமர் தமிழ்நாடு வந்தும் வெற்றி பெற முடியவில்லை. பா.ஜ.க. ஏமாற்றுவது 8 கோடி மக்களுக்கும் தெரியும். நமது வரிப்பணம் ஜி.எஸ்.டி. மூலமாக பல்லாயிரம் கோடி ஒன்றிய அரசிற்கு செல்கிறது. அதில், மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட வேண்டிய நிதி வழங்கப்படவில்லை.

இவ்வாறு ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் மாற்றாந்தாய் போக்குடன் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. ஒன்றிய அரசைக் கண்டித்து அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் 'மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடத்தவேண்டும் என்கிற தலைமைக் கழக அறிவிப்பின்படி திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட திமுக சார்பில் 27.07.2024, சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் திண்டுக்கல், மணிக் கூண்டு அருகில் 'மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையில் கழக முன்னணியினர் முன்னிலையில் நடைபெறும் இக்கண்டண ஆர்ப்பாட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளைச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசுக்கு கண்டனத்தை பதிவு செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த

# பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து ஓசூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## கிருஷ்ணகிரி மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ், எம்.எல்.ஏ. அறிக்கை!

கிருஷ்ணகிரி, ஜூலை 26-

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஒரு நாட்டின் நிதிநிலை அறிக்கை என்பது இந்தியத் திருநாட்டின் அனைத்து மாநிலங்களுக்கும் உரிய பங்கினை பகிர்ந்தளித்து நாடு முழுவதும் சமச் சீரான வளர்ச்சியை உருவாக்கிட உதவுவதுடன், நாட்டில் வாழும் கடைக்கோடி மனிதர்களின் வாழ்வை மேம்படுத்தும் கொள்கை பிரகடனமாகவே இருக்க வேண்டும். ஆனால் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை ஒட்டு மொத்த இந்திய நாட்டிற்கான நிதிநிலை அறிக்கையாக தெரியவில்லை மாறாக தங்கள் ஆட்சியை காப்பாற்றிக் கொள்வதற்காக சில மாநிலங்களுக்கு மட்டும் நிதியை தாராளமாக அள்ளிக் கொடுத்தும்,



நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்து வரும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் மீது வன்மத்தை கக்கிடும் வகையில் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது.

மெட்ரோ ரயில் திட்டத்திற்கான நிதி, தமிழ்நாடு சந்தித்த இரண்டு தொடர் பேரிடர் இழப்புகள் ஆகிய வற்றிற்கு நிதி வழங்கிட வேண்டுமென்று கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளை முற்றிலுமாக புறக்கணித்து, சில மாநிலங்களுக்கு மட்டும் பேரிடர் நிதி அள்ளி வழங்கப்பட்டுள்ளது.

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் மாற்றாந்தாய் போக்குடன்தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. ஒன்றிய அரசைக் கண்டித்து வருகிற ஜூலை 27 ம் தேதி சனிக்கிழமை, காலை 10 மணியளவில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட செயலாளர் ஒய்.பிரகாஷ், எம்.எல்.ஏ. தலைமையில் ஒசூர் ராம் நகர் அண்ணா சிலை அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை முன்பு "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெற உள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள், கழக மூத்த முன்னோடிகள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள், மாவட்ட ஊராட்சி குழு, மாநகர, ஒன்றிய குழு, பேரூராட்சி தலைவர், துணைத் தலைவர் மற்றும் கவுன்சிலர்கள், அனைத்து அணிகளின் தலைவர், துணைத் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள், ஊராட்சி தலைவர்கள், துணை தலைவர்கள் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், BLA 2, BLC உள்ளிட்ட கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் இந்த ஆர்ப்பாட்டத்தில் பெரும் திரளாக கலந்து கொண்டு தமிழ் நாடு அரசை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசுக்கு தங்கள் கண்டனத்தை பதிவு செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# வேப்பம்பட்டு பகுதியில் 'மக்களுடன் முதல்வர்' முகாம்!

## ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ துவக்கி வைத்தார்

திருவள்ளூர், ஜூலை 26 –

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதிகுட்பட்ட திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம், 25 வேப்பம்பட்டு 26 வேப்பம்பட்டு பெருமாள்பட்டு ஆகிய ஊராட்சிகளுக்கு மக்களுடன் முதல்வர் முகாம் வேப்பம்பட்டு பகுதியில் உள்ள திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இம்முகாமிற்கு ஒன்றியக் குழுத் தலைவர் ஜெயசீலி ஜெயபாலன் தலைமை தாங்கினார். வட்டாட்சியர் செ.வாசுதேவன், ஒன்றியக் கழகச் செயலாளர் சே.பிரேம் ஆனந்த், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (வ.ஊ.) எம்.ஜி.குணசேகரன், (கி.ஊ.) கே.ரவி, ஊராட்சி மன்ற தலைவர்கள் சதாபாஸ்கர், ராஜேஸ்வரி சேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த முகாமில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு மக்களுடன் முதல்வர் திட்டத்தை தொடங்கி வைத்து பொதுமக்களிடம் குறைகளை கேட்டு மனுக்களை பெற்று சிறப்புரையாற்றினர்.

இதில் பொதுகுழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், ஒன்றிய நிர்வாகிகள் மு.ராஜா, இ.என்.சேகர் மற்றும் செவ்வை கார்த்திக் உள்பட பலர் கலந்து கொண்டார்கள்.

இதன் முன்னதாக பெருமாள் பட்டு ஊராட்சியில் உள்ள ரயில் நகர் பகுதியில் பொதுமக்கள் சாலை வசதி ஏற்படுத்தி தர வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர்.

இந்த நிலையில் அதற்கான 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு இரண்டு கிலோமீட்டர் தூரத்திற்கு புதிய சாலை அமைக்கும் பணி மற்றும் கால்வாய் அமைக்கும் பணியும் துவக்க விழா நடைபெற்றது.

# இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி அறிவிப்பு!

இராணிப்பேட்டை, ஜூலை 26 -

இராணிப்பேட்டை மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் இன்று (26.07.2024 - வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணி அளவில் மாவட்ட அவைத் தலைவர் ஏ.கே.



சுந்தரமூர்த்தி தலைமையில் இராணிப்பேட்டை மாவட்ட கழக அலுவலகம் (பாரதி நகர், சிப்காட்டில்) நடைபெறும்.

எனவே மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் தவறாது பங்கேற்க கோருகிறேன்.

பொருள் :

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசை கண்டித்து மாவட்ட தலைநகர் இராணிப்பேட்டையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், கழக ஆக்கப் பணிகள் குறித்து,

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# வேலூர் மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிக்கை

வேலூர், ஜூலை 26 -

வேலூர் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சமீபத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசு சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையில் ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்காமல் புறக்கணித்து வஞ்சித்துள்ளார்கள். மேலும் தமிழ்நாட்டின் வளர்ச்சியை தடுக்கும் விதமாக அரசியல் காழ்ப்புணர்வோடு பழிவாங்கும் நோக்குடன் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு என்ற வார்த்தையே குறிப்பிடாமல் நிராகரித்துள்ளார்கள். தங்கள் அரசுக்கு முட்டுகொடுக்கும் பீகார் மற்றும் ஆந்திரம் போன்ற மாநிலங்களுக்கு வரலாறு



காணாத அளவில் நிதியை ஒதுக்கி பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டை வஞ்சித்துள்ளது.

பேரிடர் இழப்புக்கு நிதி வழங்கிட கழகத்தலைவரும், தமிழ்நாடு முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வைத்த கோரிக்கையை புறம்தள்ளி மாற்றாந்தாய் மனப்போக்குடன் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒவ்வொரு மாவட்ட தலைநகரங்களில் நடத்திட வேண்டுமென கழகத்தலைவர் அவர்கள் அறிக்கையின் வாயிலாக கேட்டுக்கொண்டதற்கு இணங்க வரும் 27.07.2024 சனிக்கிழமை காலை 10.00 மணி அளவில் வேலூர், அண்ணா கலையரங்கம் அருகில் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. ஆகிய எனது தலைமையிலும், மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, வேலூர் மாநகர செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான ப.கார்த்திகேயன், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னணியினர் முன்னிலையில் நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட கிளைகழக செயலாளர்கள், நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்டஅணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிகள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றிபெற செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர், தனது அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# நீலகிரி மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் அறிக்கை!

உதகை, ஜூலை 26 -

நீலகிரி மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நீலகிரி மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் இன்று 26.7.2024 - வெள்ளிக்கிழமை காலை 11 மணி அளவில் மாவட்டக் கழக அவைத் தலைவர் கே.போஜன் தலைமையில், கழக தேர்தல் பணி செயலாளரும், சுற்றுலாத்துறை அமைச்சருமான கா.ராமச்சந்திரன் முன்னிலையில்



மாவட்டக் கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமை கழக நிர்வாகிகள், தலைமை கழக செயற்குழு-பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர், கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள்: 1. ஜூலை 27 சனிக்கிழமை தலைமை கழக அறிவிப்பின்படி, நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில் உதகையில் ஒன்றிய பா.ஜ.க., அரசை கண்டித்து நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்குறித்து. 2. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

### மக்களின் கருத்துகளைப் பிரதிபலிக்கும் நாடாளுமன்றத்தை -

# மோடி தனது 'மனதின் குரல்' நிகழ்ச்சி போல் மாற்றிட நினைக்கிறார்!

## 'தீக்கதிர்' தலையங்கத்தில் குற்றச்சாட்டு!

சென்னை, ஜூலை 26-

நாடாளுமன்றம் நாட்டு மக்களின் பிரதிநிதி கள் தங்கள் கருத்துகளை எடுத்து வைக்கவும் மக்கள் குரலைப் பிரதிபலிக்கவும் தான் உள்ளது. ஆனால் மோடி, அவரது 'மனதின் குரல்' நிகழ்ச்சியை போல மாற்ற நினைக்கிறார் என தீக்கதிர் நாளேடு 24.7.2024 அன்று தலையங்கத்தில் குற்றம் சாட்டியுள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:

நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்பாக பிரதமர் நரேந்திர மோடி எதிர்க்கட்சிகளுக்கு வேண்டுகோள் விடுத்துப் பேசுவார், சபைக்கு வெளியே, நாடாளுமன்ற வளாகத்தில், வாங்க பேசலாம் என்று எதிர்க்கட்சியினருக்கு அழைப்பு விடுப்பார். ஆனால் உள்ளே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுவதற்கு அனுமதி கிடைக்காது. கடந்த பத்தாண்டு காலமாக நடந்தது அதுதான். மீறிப் பேசினால், குரல் எழுப்பினால் கூண்டோடு வெளியேற்றம்; அவையிலிருந்து நீக்கம் ஆகியவைதான் நடந்தது.

கடந்த 17ஆவது நாடாளுமன்றத்தின் கடைசி கூட்டத்தொடரில் 150 உறுப்பினர்களை இடை நீக்கம் செய்துவிட்டுத் தானே சர்ச்சைக்குரிய மூன்று குற்றவியல் சட்டங்களை மோடி அரசு எவ்வித விவாதமுமின்றி நிறைவேற்றிக் கொண்டது. எதிர்க்கட்சி உறுப்பினர்களின் குரலை ஒடுக்குவதை தானே மோடி அரசு செய்து தனது காரியத்தை பூர்த்தியாக்கிக் கொண்டது.



தீக்கதிர்

மோடியின் அபாண்டப் பழி!

நாடாளுமன்றத்தில் மட்டுமின்றி வெளியிலும் எதிர்க்கட்சியினர், அரசியல் செயற் பாட்டாளர்கள், அறிவுஜீவிகளின் குரலை ஒடுக்கியது கடந்த பத்தாண்டுகால மோடியின் ஆட்சி. அதனால் தானே கடந்த முறை 303 இடங்கள் பெற்றிருந்த பாஜக இந்த முறை 240 ஆக சுருண்டது. 400க்கு மேல் கேட்ட மோடிக்கு நாட்டு மக்கள் அளித்த பதில் தானே இந்த 240. ஆனாலும் கூட தனது பழைய பாதையிலிருந்தும் செயல்பாடுகளிலிருந்தும் கொஞ்சமும் பாஜகவும் மோடியும் மாறவில்லை என்பதே தெளிவாகத் தெரிகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, சிபிஎம் உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்களை பேசவிடாமலும் பேச்சின் பெரும்பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியும் மக்களின் குரலை ஒலிக்கவிடாமல் செய்தது மோடி அரசு. ஆனால் தற்போது வழக்கம்போல் நாடாளுமன்ற வளாகத்தில் பேசிய மோடி, எனது குரலை ஒடுக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்று அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டு அபாண்டமாகப் பழிபோட்டிருக்கிறார்.

நாடாளுமன்றம் நாட்டு மக்களின் பிரதிநிதிகள் தங்கள் கருத்துக்களை எடுத்துரைக்கவும் மக்களின் குரலை பிரதிபலிக்கவும் தான் உள்ளது. ஆனால் மோடி அவரது 'மனதின் குரல்' போல் மாற்றிட நினைக்கிறார். ஜெர்மனியின் ஹிட்லர் வானொலியில் உரையாற்றியதை முன்மாதிரியாகக் கொண்டு மோடி நிகழ்த்தும் மனதின் குரல் அல்ல நாடாளுமன்றம். இது மக்களின் - மக்கள் பிரதிநிதிகளின் மன்றம். எதிர்க் கட்சிகள் ஏழைகள், விவசாயிகள், இளைஞர்கள், பெண்களின் முன்னேற்றத்துக்கும் நாட்டு ஒற்றுமைக்கும் கொடுக்கும் குரலை நசுக்கிடும் முயற்சியை நரேந்திர மோடி அரசு கைவிட வேண்டும். இல்லையேல் மீண்டும் நாட்டு மக்கள் தக்க பாடம் கற்பிப்பார்கள். அப்போது எதிர்க்கட்சியாகக் கூட அமரும் வாய்ப்பு பா.ஜ.க.வுக்கு கிட்டாமல் போகும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.